# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வரி ஆண்டு மாசி மாதம் / பிப்ரவரி 2/2022 FEBRUARY 2/2022


# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் உதவி நிதி

**வணக்கம் முதலில், அனைத்து சீன சமூகத்தினருக்கும், குறிப்பாக சிலாங்கூர் மாநிலத்தில் உள்ள சீனர்களுக்கு 2022ஆம் ஆண்டு புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.** கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு பிறகு மாநில அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக புதுப்பிக்கப்பட வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. முதலாவதாக, சிலாங்கூர் பாங்கிட் உதவி RM1,000 யை 9 மாவட்டங்களை உள்ளடக்கிய மொத்தம் 55,425 குடும்பங்கள் பெற்றுள்ளன. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த 13 குடும்பங்களுக்கு தலா RM 10,000 வழங்கப்பட்டது. இதன் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5.555 கோடி ரிங்கிட் வழங்கப்பட்டுள்ளது (RM55,555,000.00). சிலாங்கூர் பாங்கிட் உதவியைப் பெறாத ஏராளமான விண்ணப்பதாரர்கள் கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் இருப்பதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உதவிக்காகக் காத்திருக்கும் காலம் குறித்து சிலர் இன்று காலை மாநில அரசாங்க அலுவலகம் முன் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். முதலில், சிலாங்கூர் பங்கிட் உதவியை விண்ணப்பிக்க, தகுதியுடையவராக இருந்தும் உதவி கிட்டாதவர்களிடம் நான் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன். கிள்ளான் மற்றும் பெட்டாலிங் மாவட்டங்களில் அதிகமாக விண்ணப்பங்கள் வந்ததும் அதில் குடும்பத் தலைவர் மட்டுமின்றி மற்றவர்களும் அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இருந்தன. மொத்தத்தில் இந்த உதவிக்காக 109,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இந்த உதவி உண்மையாக பாதிக்கப் பட்டவர்களுக்கு மட்டும் கிட்டுவதை உறுதி செய்ய, மாவட்ட அலுவலகங்கள் தரவுகளை மறு ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டு உள்ளனர், பெட்டாலிங் மாவட்ட ஆய்வு அடுத்த வார இறுதிக்குள் முடிக்கப்படும். கிள்ளான் மாவட்டத்தில், 30,000 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இப்பொழுது தினசரி 1,000 விண்ணப்பங்களுக்கு பிஎஸ்பி தொகை RM1,000 அங்கீகரிக்கப்படுகிறது. அதை தினசரி 2,000 மற்றும் 3,000 பெறுநராக உயர்த்த செயல் முறையை மேம்படுத்த மற்ற மாவட்ட பணியாளர்கள் உதவியை பெற ஆலோசனை வழங்கினார்,





உயர்கல்வி மாணவர்களுக்கான கல்விக் கட்டண உதவி நிதி
பக்கம் 5

ஸ்ரீ மூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தின் வெள்ள நிவாரணப் பணி
பக்கம் 10

1,500 பேருக்கு அடைக்கலம் தந்த எமரால்டு தமிழ்ப்பள்ளி
பக்கம் 13

## லஞ்சம் பெறுவோருக்கு கடுமையான தண்டனை வழங்க சிலாங்கூர் சுல்தான்

ஷா ஆலம் – ஊழல் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் அச்செயல்களைப் புரிவோருக்கு அரசாங்கம் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும் என்று நேற்று வெள்ளிக்கிழமை சமய உரையின் போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு தாம் உடன்படுவதாக மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் கூறியுள்ளார். ஊழலுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரப்படுத்தும் பட்சத்தில் சம்பந்தப்பட்டத் தரப்பினர் ஊழலில் ஈடுபடுவதற்கே அஞ்சுவார்கள் என்று சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கூறினார். ஊழல் மிகவும் ஆபத்தானது என்பதோடு பெரும் பாவச்செயலாகவும் கருதப்படுகிறது. இது சமுதாயத்திற்கும் இஸ்லாத்திற்கும் குந்தகத்தை ஏற்படுத்தும் என்பதோடு அரசு நிர்வாகத்தையும் நிலையற்றதாக ஆக்கி விடும் என்றார் அவர். நீதித் துறை, நிலம், வரி, ஸக்கத் மற்றும் அனைத்து நிலைகளிலும் ஊழல் நிலவுகிறது. அதோடு மட்டுமின்றி சமயம் சார்ந்தவர்கள் மத்தியிலும் இந்த போக்கு காணப்படுகிறது என்று சிலாங்கூர் அரச அலுவலக பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## புத்ரா பல்கலைக்கழக இணை வேந்தராக துங்கு அமீர் ஷா நியமனம்

ஷா ஆலம் – மலேசிய புத்ரா பல்கலைக்கழக (யு.பி.எம்.) இணை வேந்தராக சிலாங்கூர் ராஜா மூடா துங்கு அமீர் ஷா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த புதன் கிழமை நடைபெற்ற பல்கலைக்கழகத்தின் 44 வது பட்டமளிப்பு விழாவின் போது பல்கலைக்கழகத்தின் வேந்தரான சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல் ஹாஜ் இந்த நியமனத்தைச் செய்து வைத்தார். இந்த நியமனம் 2021 அக்டோபர் மாதம் தொடங்கி 2024 அக்டோபர் வரை மூன்று ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும். இந்த நிகழ்வில் நிறை நிலைப் பேராசிரியர் டத்தோ டாக்டர் சோஹாடி பார்டாய் மற்றும் நிறை நிலைப் பேராசிரியர் டான்ஸ்ரீ டாக்டர் ஜலாலுடின் சைட் சலீம் ஆகியோரும் உதவி வேந்தர்களாக நியமனம் பெற்றனர். இந்த நியமனச் சடங்கிற்குப் பிறகு துங்கு அமீர் 954 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கியதாக சிலாங்கூர் அரச தெரிவித்தது.

# சீனப்புத்தாண்டை மிதமாகக் கொண்டாடுவீர் சிலாங்கூர் சுல்தான் தம்பதியர் வாழ்த்து



ஷா ஆலம் – சீனப் புத்தாண்டை மிதமான அளவில் கொண்டாடும்படி மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் மற்றும் தெங்கு பெர்மைசூரி சிலாங்கூர் தம்பதியர் கேட்டுக் கொண்டுள்ளனர். கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவலைத் தடுக்க நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை (எஸ்.ஓ.பி.) முறையாக கடைபிடிக்கும்படி சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் மற்றும் தெங்கு பெர்மைசூரி நோரஷிகின் தம்பதியர் சீனப்புத்தாண்டை கொண்டாடும் அனைவருக்கும் நினைவுறுத்தினர். இத்தகைய விழாக்களின் மூலம் இனங்களுக்கிடையே ஒருமைப்பாடு, சகிப்புத்தன்மை, நல்லிணக்கம் மேலோங்கும் என்றும் அவர்கள் நம்பிக்கைத் தெரிவித்தனர். அடுத்த தலைமுறையினரும் பின்பற்றுவதற்காக வழி வழியாக கடைபிடித்து வரும் இந்த பாரம்பரியம் தொடரப்பட வேண்டும் என்று அரச அலுவலகத்தின் பேஸ்புக் வாயிலாக வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் அவர்கள் கூறினர். சிலாங்கூர் மாநிலத்திலுள்ள அனைத்து சீன சமூகத்தினருக்கும் எங்களின் சீனப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அந்த பதிவில் தெரிவித்தனர்.

# அரசு ஊழியர்கள் ஊழலில் இருந்து விலகியிருப்பர் சிலாங்கூர் சுல்தான் நம்பிக்கை




ஷா ஆலம் – அரசு ஊழியர்கள் குறிப்பாக சிலாங்கூரைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணியை ஆற்றுவதில் உயர்நெறியையும் உயர்ந்தபட்ச நேர்மையையும் கொண்டிருப்பர் எனத் தாம் நம்புவதாக மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். அரசு ஊழியர்கள் நேர்மையுடன் செயலாற்றுவதோடு ஊழல் நடவடிக்கைளிலிருந்து விலகியும் மக்கள் பிரச்சனைகளைக் களைவதில் அக்கறையும் கொண்டிருப்பர் என நான் நம்புகிறோன் என்று சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா கூறினார். டான்ஸ்ரீ அம்ரின் புவாங் எழுதிய புத்தகத்தின் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு சொன்னார். இந்நிகழ்வில் சிலாங்கூர் ராஜா மூடா துங்கு அமீர் ஷா ஷராபுடின் இட்ரிஸ் ஷாவும் கலந்து கொண்டார்.

சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, முன்னாள் நிர்வாக மற்றும் அரச தந்திர அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டான்ஸ்ரீ அப்துல் ஹலிம் அலி ஆகியோரும் இந்நிகழ்வுக்கு சிறப்பு வருகை புரிந்தனர். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சுல்தான், நாட்டின் தேசிய கணக்காய்வுத் துறைத் தலைவராக நீண்ட காலம் அதாவது 11 ஆண்டுகள் மிகவும் சிறப்பான முறையில் அம்ரின் பணியாற்றியதாக குறிப்பிட்டார். சிலாங்கூர் மாநிலத்தில் அர்ப்பண உணர்வுடன் ஆற்றிய சேவைக்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று சுல்தான் மேலும் கூறினார்.

# இலவச சிம் கார்டு விநியோகத் திட்டம் இவ்வாண்டும் தொடரப்படும்

# 25,000 பேர் இலக்கு




காஜாங் – சிலாங்கூர் மாநில இலவச இணைய தரவு சேவைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 25,000 பேருக்கு சிம் கார்டுகளை வழங்க எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர், இணையம் வாயிலாக வர்த்தகம் புரிவோர் மற்றும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இலவச சிம் கார்டுகளை வழங்கப்படும் என்று எம்.பி.ஐ. தலைமை செயல்முறை அதிகாரி நோரித்தா முகமது சீடேக் கூறினார். கடந்தாண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்திற்கு அமோக ஆதரவு கிடைத்த தைத் தொடர்ந்து இவ்வாண்டிலும் அது தொடரப்படும். இணைய சேவை அன்றாட வாழ்வில் அதிக முக்கிய அங்கமாக விளங்குவதால் இதற்கான தேவை அதிகம் உள்ள தரப்பினருக்கு உதவுவதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றார் அவர். இங்குள்ள கம்போங் செசெப்பான் பத்து மினாங்கபாவ் சமூக மண்டபத்தில் எம்.பி.ஐ. ஏற்பாட்டில் நடைபெற்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வுக்கு தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம அவர் இதனைத் தெரிவித்தார். சிலாங்கூர் மாநிலத்திலுள்ள 70,000 பேருக்கு இலவச இணைய தரவு சேவை வழங்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த ஆகஸ்டு மாதம் 4 ஆம் தேதி அறிவித்திருந்தார். பன்னிரண்டு மாதங்களுக்கு இலவச இணைய தரவு சேவையை வழங்கும் இத்திட்டத்திற்கு 1 கோடியே 75 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

## “மீண்டும் பள்ளிக்குச் செல்ல 16,800 மாணவர்களுக்கு எம்.பி.ஐ. உதவி”




சுபாங் – இவ்வாண்டு மீண்டும் பள்ளிக்குச் செல்வோம் திட்டத்தை அமல்படுத்துவதற்காக எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகம் 16 லட்சத்து 80 ஆயிரம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

இந்த பற்றுச் சீட்டுத் திட்டத்தின் வழி 16,800 ஆரம்பப் பள்ளி மாணவர்கள் பயன்பெறுவர் என்று எம்.பி.ஐ. நிறுவன சமூக கடப்பாட்டுப் பிரிவுத் தலைவர் அகமது அஸ்ரி ஜைனால் நோர் கூறினார்.

ஒவ்வொரு தொகுதியிலும் தகுதியுடைய மற்றும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த தலா 300 மாணவர்கள் இந்த உதவியைப் பெறுவதற்கு ஏதுவாக இப்பற்றுச் சீட்டுகள் அனைத்து 55 சட்ட மன்றத் தொகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

இந்த பற்றுச்சீட்டுகள் அனைத்து 56 தொகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டன. இவற்றை மாணவர்களுக்கு விநியோகிக்கும் பணி மார்ச் மாதம் முற்றுப் பெறும் என அவர் தெரிவித்தார்.

இலவச இணைய தரவு சேவை, சிலாங்கூர் டியூஷன் ராக்யாட், தடுப்பூசி மையங்களுக்குச் செல்ல போக்குவரத்து கட்டணக் கழிவு, மீண்டும் பள்ளிக்குச் செல்வோம் திட்டம், தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ் உபசரிப்பு உள்ளிட்ட நிகழ்வுகளை நடத்த 3 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்தாண்டு கூறியிருந்தார்.

# வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 40,000 மாணவர்களுக்கு

# 100 வெள்ளி பற்றுச் சீட்டு




ஷா ஆலம், பிப் 3– கடந்தாண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 40,000 மாணவர்களுக்கு மாநில அரசு உதவிப் பொருள்களை வழங்கவுள்ளது. அம்மாணவர்களுக்கு 100 வெள்ளிக்கான பற்றுச் சீட்டு இம்மாதம் மூன்றாம் வாரம் தொடங்கி கட்டங் கட்டமாக விநியோகிக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த பற்றுச் சீட்டைக் கொண்டு ஆரம்ப, இடைநிலை மற்றும் சிலாங்கூர் சமய இலாகா பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு தேவையான பள்ளிச் சீருடைகள், காலணி, காலுறை போன்ற பொருள்களை வாங்கிக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அந்த இம்மாதம் 18 ஆம் தேதி முதல் மாத இறுதி வரையிலான காலக்கட்டத்தில் அப்பற்றுச்சீட்டுகளைப் பயன்படுத்தி பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த பொருள் விநியோக மையங்கள் தொடர்பான விபரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றார் அவர்.

இங்குள்ள பொருளாதார நடவடிக்கை மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்போது தாங்கள் மாவட்ட கல்வி இலாகா மற்றும் தொகுதி சேவை மையங்கள் வாயிலாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார். கடந்தாண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி பெய்த அடைமழை காரணமாக சிலாங்கூர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது. இந்த வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் மாநில அரசு பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் 10 கோடி வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

# வெள்ளத்திற்கு பிந்தைய பொருளாதார மீட்சி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்




ஷா ஆலம் - வெள்ளம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுக்கு பிந்தைய பொருளாதார மீட்சி நடவடிக்கைள் இவ்வாண்டில் துரிதப்படுத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பொருளாதார வளர்ச்சித் தடத்தில் சிலாங்கூர் மாநிலம் தொடர்ந்து இருப்பதை உறுதி செய்வதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார். மலேசியா மற்றும் ஆசிய வட்டாரத்தில் நீடித்த பொருளாதார வளர்ச்சி கொண்ட மாநிலம் என்ற அந்தஸ்தை சிலாங்கூர் தொடர்ந்து நிலை நிறுத்துவதை உறுதி செய்வதற்காக வெள்ளம் மற்றும் கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு பிந்தைய பொருளாதார மீட்சி நடவடிக்கைகளை மாநில அரசு இவ்வாண்டு துரிதப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார். இயங்கலை வாயிலாக நடைபெற்ற சிலாங்கூர் மாநில நிலையிலான 2022 சீனப்புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் அவர் இவ்வாறு கூறினார். நேற்றிரவு 9.00 மணி தொடங்கி நடைபெற்ற இந்த 90 நிமிட நிகழ்ச்சியில் ஆட்சிக்குழு உறுப்பினரின் சிறப்புரையோடு 55 கலைஞர்கள் பங்கேற்ற 10 கலை படைப்புகளும் இடம் பெற்றன.

# செல்வேக்ஸ் பூஸ்டர் திட்டத்தின் கீழ் 74,000 பேர் ஊக்கத் தடுப்பூசி பெற்றனர்



ஷா ஆலம் — சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் பூஸ்டர் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் கடந்தாண்டு டிசம்பர் மாதம் முதல் இதுவரை 74,000 பேர் ஊக்கத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இந்த திட்டத்திற்கு மக்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைத்து வரும் நிலையில் மாநிலத்திலுள்ள 17 செல்கேர் கிளினிக்குகளுக்கு தினசரி 1,950 தடுப்பூசிகள் ஒதுக்கப்படுவதாக கிளினிக் செல்கேர் தலைமை நிர்வாகி டாக்டர் ஜீவராஜா ரத்னராஜா கூறினார். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் இத்தகைய ஊக்கத் தடுப்பூசித் திட்டத்திற்கு ஏற்பாடு செய்வதை தாங்கள் பெரிதும் வரவேற்பதாக அவர் சொன்னார். சிலாங்கூர் அரசின் செல்வேக்ஸ் பூஸ்டர் தடுப்பூசித் திட்டம் கடந்தாண்டு டிசம்பர் 8 ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக மாநில அரசு 157,000 தடுப்பூசிகளை ஒதுக்கியுள்ளது. இரண்டு டோஸ் தடுப்பூசியை முழுமையாகப் பெற்ற 18 வயதுக்கும் மேற்பட்டோர் இந்த ஊக்கத் தடுப்பூசியைப் பெறலாம். மாநிலத்திலுள்ள செல்கேர் கிளினிக்குகளின் பட்டியலை https://selcare-clinic.com/our-clinics/ என்ற அகப்பக்கம் வாயிலாக அல்லது செலங்கா செயலி மூலம் அறிந்து கொள்ளலாம். சிலாங்கூரில் தடுப்பூசித் திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் மாநில அரசு செல்வேக்ஸ் கம்யூனிட்டி மற்றும் செல்வேக்ஸ் இண்டஸ்ட்ரிஸ் திட்டங்களை கடந்தாண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதி அமல்படுத்தியது.

# 5 முதல் 11 வயது சிறார்களுக்கான தடுப்பூசி இயக்கம் இன்று ஆரம்பம்



கோலாலம்பூர் — ஐந்து முதல் பதினோரு வயது வரையிலான சிறார்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி இயக்கம் (பிக்கிட்ஸ்) தொடக்கக் கட்டமாக கிள்ளான் பள்ளத்தாக்கில் இன்று தொடங்குகிறது.

இந்த சிறார் தடுப்பூசி இயக்கம் இன்று தொடங்கும் நிலையில் நேற்று முன்தினம் வரை இத்திட்டத்தில் பங்கேற்பதற்கு சிறார்களிடமிருந்து 511, பதிவுகள் கிடைத்துள்ளன.

இந்த பிக்கிட்ஸ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி பெறுவதற்கு கோலாலம்பூரில் 47,500 சிறார்களும் புத்ரா ஜெயாவில் 3,400 சிறார்களும் சிலாங்கூரில் 131,500 சிறார்களும் பதிவு செய்துள்ளதாக சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தனது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பெர்மானா செய்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் பல பெற்றோர்கள் சிறார்களுக்கான இந்த தடுப்பூசி இயக்கத்திற்கு வரவேற்பு தெரிவித்தனர்.

தங்களை பிள்ளைகளை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கவும் கோவிட்-19 நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் முயற்சிக்கு உதவி புரியவும் இந்த சிறார் தடுப்பூசித் திட்டத்திற்கு பதிவு செய்ததாக அவர்கள் கூறினர்.

மைசெஜாத்ரா செயலி வாயிலாக மிகவும் எளிதான முறையில் தடுப்பூசிகு பதிவு செய்யவும் வருகைக்கான முன்பதிவு பெறவும் செய்யப்பட்ட ஏற்பாட்டை தாங்கள் வரவேற்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## பாத மசாஜ் நடைபாதை —
# சுபாங் ஜெயாவில் நிர்மாணிப்பு



ஷா ஆலம் — சுபாங் ஜெயா வட்டார மக்களின் வசதிக்காக யு.எஸ்.ஜே. 9/5 பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் இயற்கையாக பாத மசாஜ் ஏற்ப நடைபாதை அமைக்கப் பட்டுள்ளது. சுபாங் ஜெயா தொகுதி மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட பல்வேறு சிறு திட்டங்களில் இதுவும் ஒன்றாகும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மிஷெல் இங் மேய் ஸீ கூறினார். யு.எஸ்.ஏ. 9 பகுதியில் மூத்த குடிமக்கள் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு குடியிருப்பாளர் சங்கம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டது என்றார் அவர். மொத்தம் 19,997 வெள்ளி மதிப்பிலான இந்த நடைபாதை திட்டம் கடந்த நவம்பர் 29 ஆம் தேதி முற்றுப் பெற்றதாக அவர் தெரிவித்தார். காலை, மாலை இரு வேளைகளிலும் பொது மக்கள் இங்கு பயிற்சி மேற்கொள்வதை காணமுடிவதாக அறிக்கை ஒன்றில் அவர் சொன்னார். இந்த பாத மசாஜ் பயிற்சி உடலாரோக்கியத்தை மேம்படுத்த உதவுவதால் இத்திட்டம் பொது மக்களுக்கு பயனுள்ள ஒன்றாக விளங்குகிறது என்று யு.எஸ்.ஜே. 9 ருக்குன் தெத்தாங்கா தலைவர் கூ கா ஜின் தெரிவித்தார்.

# ஷா ஆலமில் வெள்ளத் தடுப்பு சுரங்கப் பாதை



ஷா ஆலம் — சிலாங்கூரில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதை மற்றும் வெள்ள நீர் மேலாண்மை திட்டம் (ஸ்மார்ட்) மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மாநில அரசிடம் அறிக்கை சமர்பிக்கப்படும். இவ்விவகாரம் தொடர்பான முழுமையான தகவல்களை அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் திரட்டி வருவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நாங்கள் பல்வேறு வழிவகைளை ஆராய்ந்து வருகிறோம். அவற்றில் சுங்கப் பாதை திட்டமும் ஒன்று. ஜப்பானில் உள்ளதை போன்ற ஆற்றோர நீர் சேகரிப்பு தொழில்நுட்பமும் இதில் அடங்கும் என்று அவர் தெரிவித்தார்.

தீர்வுக்கான வழிவகைகளில் இவையாவும் அடங்கியுள்ளன. அவற்றை விரைவாகவும் ஆக்ககரமான முறையிலும் எவ்வாறு அமல்படுத்தப் போகிறோம் என்பதுதான் தற்போதுள்ள சவாலாகும் என்றார் அவர். சுங்கப் பாதை தொடர்பான பரிந்துரையை தமது தரப்பு வரவேற்பதாக கூறிய அவர், எனினும், எவ்வளவு உபரி நீரை அதன் மூலம் வெளியேற்ற முடியும் என்பதை கண்டறிய வேண்டியுள்ளது என்றார்.

கடந்தாண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்த வெள்ளச் சம்பவத்தைப் பொறுத்த வரை அளவுக்கு அதிமான மழை நீரை சேகரிக்கும் ஆற்றல் கால்வாய்களுக்கு இல்லாதது மற்றும் கடல் பெருக்கு ஆகியவை முக்கிய காரணமாக விளங்கின என அவர் குறிப்பிட்டார்.

வெள்ளப் பிரச்னைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காணும் விதமாக கோலாலம்பூரில் உள்ளதைப் போல் ஷா ஆலம் நகரின் மக்கள் நெரிசல்மிக்க பகுதிகளில் ஸ்மார்ட் சுங்கப்பாதை அமைக்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அமிருடின் கூறியிருந்தார்.

# உயர்கல்வி மாணவர்களுக்கான கல்விக் கட்டண உதவி நிதி



ஷா ஆலம் — குறைந்த வருமானம் பெறும் பி40 குடும்பங்களைச் சேர்ந்த இந்திய உயர்கல்விக்கூட மாணவர்களுக்கு கல்விக் கட்டண உதவித் தொகையை சிலாங்கூர் மாநில அரசு வழங்கவிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கு அரசாங்க மற்றும் தனியார் உயர்கல்விக்கூடங்களில் பயிலும் இந்திய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இளங்கலை பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 5,000 வெள்ளியும் டிப்ளோமா கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 3,000 வெள்ளியும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

இந்த கல்வி கட்டண நிதிக்கு விண்ணப்பம் செய்வதற்கான இறுதிநாள் இம்மாதம் 24 ஆம் தேதியாகும். இதற்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்பாரங்களைப் பெறுவதற்கு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் அலுவலகத்தில் அமைந்துள்ள பி40 உயர்கல்வி மாணவர்களுக்கான கல்விக் கட்டண உதவி செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

அலுவலக முகவரி
PEJABAT YB TUAN GANABATIRAU A/L VERAMAN,
EXCO Kebajikan Masyarakat, Pekerja dan Kerajaan Prihatin Negeri Selangor,
Tingkat 5, Bangunan Sultan Salahuddin Abdul Aziz Shah, 40503 Shah Alam, Selangor Darul Ehsan.
TEL: 03-55447307/7305
E-MAIL: staffexco2014@gmail.com

# பிப் 1 முதல் வங்கிகளுக்கு இடையிலான ஏடிஎம் பரிவர்த்தனைகளுக்கு RM1 கட்டணம்




ஷா ஆலம் : நாளை முதல், தானியங்கி பணப்பரிமாற்ற இயந்திரங்கள் (ஏடிஎம்) மூலம் RM1 பரிவர்த்தனை செய்ய, வாடிக்கையாளர்களுக்கு மீண்டும் கட்டணம் அமல்படுத்தப்படும்.

மேபேங்க், பேங்க் இஸ்லாம் மலேசியா, சிஜஎம்பி பேங்க், ஆர்எச்பி பேங்க், சிட்டி பேங்க் மற்றும் எச்எஸ்பிசி உள்ளிட்ட பல வங்கிகள் டிசம்பர் நடுப்பகுதியில் அந்தந்த சமூக ஊடக தளங்களில் அறிவிப்பைப் பதிவேற்றியதாக பெரிட்டா ஹரியான் போர்டல் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் ஒரு அறிவிப்பின் மூலம், பிப்ரவரி 1 முதல், ஏடிஎம்களில் வங்கிகளுக்கு இடையேயான பணம் எடுக்கும் பரிவர்த்தனை கட்டணங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று மேபேங்க் தெரிவித்துள்ளது.

மேபேங்க் வாடிக்கையாளர்கள் மேபேங்க் ஏடிஎம்களில் கட்டணம் இல்லாமல் பணத்தை எடுக்கலாம் என்று வங்கி தெரிவித்துள்ளது.

சிஜஎம்பி இன் படி, 2022ஆம் ஆண்டு பிப்ரவரி 1 முதல், சிஜஎம்பி அல்லாத வங்கி/ சிஜஎம்பி இஸ்லாமிய ஏடிஎம்கள்/விற்பனை இயந்திரங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு வங்கிகளுக்கு இடையேயான பணப் பரிமாற்றங்களுக்கு RM1 பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும்."

பேங்க் இஸ்லாம் படி, பேங்க் இஸ்லாம் கார்டு வைத்திருப்பவர்களுக்கு, பேங்க் இஸ்லாம் ஏடிஎம்களைப் பயன்படுத்தி பணம் எடுப்பதற்கு கட்டணம் இல்லை."

ஏப்ரல் 6, 2020 அன்று, மக்கள் நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவின் போது எம்இபிஎஸ் முறையைப் பகிர்ந்து கொள்ளும் ஏடிஎம்கள் மூலம் பணம் எடுப்பதை எளிதாக்குவதற்காக அரசாங்கம் கட்டணங்களை தள்ளுபடி செய்தது.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,**
**No. 1, Jalan Indah 14/ 8,**
**Seksyen 14, 40000 Shah Alam,**
**Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

## வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 91 குடும்பங்களுக்கு
# எம்.பி.ஐ. வெ 27,300 நிதியதவி



காஜாங் - பெரானாங் வட்டாரத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட் 91 குடும்பங்களுக்கு எம்.பி.ஐ. எனப்படும் சிலாங்கூர் மந்திரி புசார் கழகம் 27,300 வெள்ளி நிதியதவி வழங்கியது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 300 வெள்ளி வழங்கப்பட்டதாக எம்.பி.ஐ. தலைமை செயல்முறை அதிகாரி நோரித்தா முகமது சீடேக் கூறினார். கடந்தாண்டு நவம்பர் மாதம் 22 ஆம் தேதி ஏற்பட்ட வெள்ளத்தில் இவ்வட்டாரத்தைச் சேர்ந்த ஒன்பது கிராமங்கள் பாதிக்கப்பட்டன. இந்த பேரிடரில் அங்குள்ள குடும்பங்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு உதவ நாங்கள் வந்துள்ளோம். இந்த ரொக்க உதவித் தொகை அவர்களின் பொருளாதார சுமையை ஓரளவு குறைக்க உதவும் என நம்புகிறோம் என்றார் அவர். பெரானாங் பகுதியில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்கியப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்கத் தொகை வழங்குவது தவிர்த்து அவர்களுக்கு உணவுக் கூடைகள் வழங்கப்பட்டதோடு அவர்களின் வீடுகளைத் துப்புரவு செய்யும் பணியில் தன்னார்வலர்களும் ஈடுபடுத்தப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டார். இது போன்ற உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் எனக் கூறிய அவர், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 15 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டிலிருந்து இந்த நிதியதவி வழங்கப்படுகிறது என்றார்.

## செர்டாங், பி.கே.ஆர்.சி. மையத்திற்கு
# சிலாங்கூர் அரசு வெ. 320.000 நிதியுதவி



ஷா ஆலம் – செர்டாங், மேப்ஸ் விவசாய கண்காட்சி மையத்தில் அமைந்துள்ள கோவிட்-19 ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்துதல் (பி.கே.ஆர்.சி.) 2.0 நிலையத்தின் நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக 320,000 வெள்ளி மதிப்பில் பல்வேறு உதவிகளை சிலாங்கூர் அரசு செய்துள்ளது.

அந்த மையம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற்ற சமயத்தில் இந்த உதவிகள் வழங்கப்பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார். முன்களப் பணியாளர்களுக்கு கையடக்க கணினிகள் விநியோகம், தளவாடங்கள் மற்றும் உணவு உதவி, அம்மையத்திலிருந்த சிறார் பராமரிப்பு மைய நிர்வாகச் செலவினம் ஆகியவையும் அதில் அடங்கும். இத்திட்டங்களை அமல்படுத்துவதற்கு உண்டான செலவு 320,000 வெள்ளியாகும் என்றார் அவர். அந்த மையத்திலிருந்த கடைசி நோயாளிகள் குழு கடந்த வாரம் வெளியேறியதைத் தொடர்ந்து அம்மையம் வரும் 8 ஆம் தேதியுடன் மீட்டப்படுகிறது. அந்த மையம் செயல்பட்ட 14 மாத காலத்தில் 166,000 கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளித்துள்ளது.

## உடல் உறுப்புகளுக்காக சிறார்களைக்
# கடத்தும் கும்பல் குறித்து எச்சரிக்கையா?

கோலாலம்பூர் – உடல் உறுப்புகளுக்காக 15 வயதுக்கும் கீழ்ப்பட்ட சிறார்களை கடத்தி விற்கும் கும்பலுக்கு எதிராக விழிப்புடன் இருக்கும்படி மலேசியர்களுக்கு தாங்கள் எச்சரிக்கை விடுத்ததாக வெளிவந்த தகவலை அரச மலேசிய போலீஸ் படை மறுத்துள்ளது. கடத்தல் நடவடிக்கைக்காக அக்கும்பல் புரோட்டோன் வீரா கார் மற்றும் வெள்ளை நிற வேனை பயன்படுத்துவதாக சமூக ஊடகங்களில் வெளி வந்த அந்த தகவல் 2016 முதல் பரப்பப்பட்டு வருவதோடு அது தற்போது மீண்டும் பகிரப்படுகிறது என்று அரச மலேசிய போலீஸ் படையின் வர்த்தகத் தொடர்புப் பிரிவுத் தலைவர் சூப்பிரிண்டெண்டன் ஏ.ஸ்கந்தகுரு கூறினார். சமூக ஊடகங்களில் பகிரப்படுவதை போல் கடத்தல் மற்றும் உடல் உறுப்பு விற்பனை தொடர்பில் போலீசார் இதுவரை எந்த புகாரையும் பெறவில்லை என்று இவர் தெளிவுபடுத்தினார். அதே சமயம், இச்சம்பவம் தொடர்பில் புக்கிட் அமான் போலீஸ் தலைமையகம் எந்த எச்சரிக்கையையும் விடுக்கவில்லை என்று அறிக்கை ஒன்றில் அவர் சொன்னார். சமூக ஊடகங்களில் கூறப்படுவதைப் போல் புக்கிட் அமான் போலீஸ் தலைமையகத்தின் நடவடிக்கை பிரிவின் வழி எந்த எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை என்றார் அவர். அந்த சமூக ஊடகத் தகவலில் மனிதர்களின் இருதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கண் போன்ற உறுப்புகளுக்கான விலையும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இது போன்ற ஆதாரமற்ற செய்திகளை பொதுமக்கள் நம்பக் கூடாது என்பதோடு அதனை பரப்பவோ பிறருடன் பகிரவோ கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

# தொழில்முனைவோருக்கு உதவ 7
## வர்த்தக கடனுதவித் திட்டங்கள்



ஷா ஆலம் - வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய விரும்பும் தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் எழு கடனுதவித் திட்டங்களை யாயாசான் ஹிஜ்ரா சிலாங்கூர் அறவாரியம் அறிமுகப்படுத்துகிறது.

ஐ.பி.ஆர். எனப்படும் பெடுலி ராக்யாட் திட்டத்தின் கீழ அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டங்களுக்கு http://mikrokredit.selangor.gov.my/e-hijrah/login என்ற அகப்பக்கம் வாயிலாக விண்ணப்பம் செய்யலாம். இத்திட்டங்கள் தொடர்பான மேல் விபரங்களை www.hijrahselangor.com. என்ற அகப்பக்கம் வழி அறிந்து கொள்ளலாம்.

வர்த்தகத்தை விரிவு படுத்துவதற்கு மூலதன உதவி தேவைப்படும் தொழிலமுனைவர் இந்த ஹிஜ்ரா சிலாங்கூர் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் என்று அந்த அறவாரியம் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் 7 கடனுதவித் திட்டங்களின் பட்டியலையும் அது வெளியிட்டுள்ளது. i-Bisnes, Zero to Hero, Niaga Darul Ehsan (NaDI), Go Digital, i-Lestari, i-Agro dan i-Bermusim ஆகியவையே அந்த ஏழு கடனுதவித் திட்டங்களாகும்.

ஹிஜ்ரா கடனுதவித் திட்டத்தில் இவ்வாண்டு சில மாற்றங்கள் செய்யப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது கூறியிருந்தார்.

# சிலாங்கூரில் அந்நிய முதலீடு அடுத்தாண்டில் சிறப்பாக இருக்கும்



பெட்டாலிங் ஜெயா – சிலாங்கூர் மாநிலத்தில் அந்நிய நேரடி முதலீடு அடுத்தாண்டில் சிறப்பானதாக இருக்கும் என்று முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். அந்நிய நாடுகளின் எல்லை தொடர்ந்து மூடப்பட்டிருப்பது இவ்வாண்டில் வெளிநாடுகளுக்கான முதலீட்டுப் பயணங்களில் சிறிது பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் சொன்னார். இணையம் வாயிலாக முதலீட்டு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்ட போதிலும் சில முதலீட்டு நடவடிக்கைகளில் முதலீட்டாளர்களின் நேரடி பங்கேற்பு அவசியம் தேவைப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். எல்லைகள் மூடப்பட்டிருப்பதால் ஏற்படும் பாதிப்புகளை நம்மால் தவிர்க்க இயலவில்லை. இருப்பினும் அடுத்தாண்டு சிறப்பானதாக இருக்கும் என நம்புகிறோம் என்றார் அவர். நேற்று இங்குள்ள ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற வர்த்தக மற்றும் பொது போக்குவரத்து பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறியும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இருந்த போதிலும் ஏற்கனவே இலக்கு நிர்ணயித்தபடி 800 கோடி வெள்ளி முதலீட்டை இவ்வாண்டில் ஈர்க்க இயலும் என்றும் அவர் சொன்னார். கடந்த 2021ஆம் ஆண்டில் சிலாங்கூர் 590 கோடி வெள்ளி முதலீட்டைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 300 வணிகர்களுக்கு கோஹிஜ்ரா கூட்டுறவுக் கழகம் ஏற்பாட்டில் வர்த்தக பொருள்கள் விநியோகம்




ஷா ஆலம் – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 300 சிறு வணிகர்களுக்கு கடந்த மாதம் முதல் இதுவரை 100,000 வெள்ளி மதிப்பிலான வர்த்தக உபகரணங்களை கோஹிஜ்ரா எனப்படும் கோப்ராசி வர்கா ஹிஜ்ரா சிலாங்கூர் பெர்ஹாட் கூட்டுறவுக் கழகம் வழங்கியுள்ளது. அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலம் கிடைக்கப் பெற்ற அந்த வர்த்தக உபகரணங்கள் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டதாக அக்கூட்டுறவுக் கழகத்தின் தலைமை நிர்வாகி முகமது சுக்ரி இஸ்மாயில் கூறினார்.

தற்காலிக கூடாரங்கள், சமையல் அடுப்புகள், சோறு மற்றும் நீரை சேகரித்து வைக்கும் கலங்கள் விளக்குகள் உள்ளிட்ட பொருள்கள் அவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

வெள்ளம் காரணமாக வர்த்தக உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களை இழந்த சிறு வியாபாரிகளுக்கு உதவுவதற்கு பலர் முன்வந்துள்ளது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று அவர் சொன்னார்.

இன்று இங்குள்ள கோஹிஜ்ரா தலைமையகத்தில் நடைபெற்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சிறு வியாபாரிகளுக்கு வர்த்தக உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஷா ஆலம் மற்றும் கிள்ளான் வட்டாரத்தில் பாசார் மாலாம் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் 43 சிறு வியாபாரிகள் இந்த உதவிப் பொருள்களை இன்று பெற்றனர். இவ்வாண்டு இறுதிக்குள் மேலும் 300 முதல் 400 சிறு வியாபாரிகளுக்கு உதவிப் பொருள்களை வழங்க தாங்கள் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 2022 சிலாங்கூர் வான் கண்காட்சியில் பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்



ஷா ஆலம் – இவ்வாண்டு நவம்பர் மாதம் 8 முதல் 10 ஆம் தேதி வரை நடைபெறும் சிலாங்கூர் வான் கண்காட்சி கடந்த 2021 கண்காட்சியைவிட மேலும் சிறப்பானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுமக்கள் மற்றும் வான் போக்குரத்து துறையைச் சேர்ந்தவர்களை அதிகளவில் ஈர்க்கும் வகையில் விமான சாகச நிகழ்வும் இம்முறை நடத்தப்படும் என்று முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார். கடந்தாண்டு இந்நிகழ்வை நடத்தியதன் மூலம் போதுமான அளவு அனுபவத்தை பெற்றுவிட்டோம். ஆகவே இம்முறை அதிகளவிலான மக்களை ஈர்ப்பதற்கு ஏதுவாக நமது முயற்சிகளை இரட்டிப்பாக்கவுள்ளோம் என்றார் அவர். இம்முறை நடைபெறும் கண்காட்சி பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அளவில் மட்டும் சிறப்பானதாக இருக்காது. அதையும் தாண்டி விமானங்களை ஒரே இடத்தில் நிறுத்தி வைக்காமல் வான் சாகசங்களையும் இம்முறை நிகழ்த்த திட்டமிட்டுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மந்திரி புசாரின் சீனப்புத்தாண்டு வாழ்த்து




ஷா ஆலம் – சீனப்புத்தாண்டின் போது பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினரை ஒன்றாக சந்திப்பது சீன சமூகத்திற்கு மகிழ்ச்சி தரும் ஒரு விஷயமாகும். கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இந்த பாரம்பரியத்தை கடந்த ஈராண்டுகளாக கடைபிடிக்காமல் இருந்தவர்களுக்கு இவ்வாண்டு புத்தாண்டு மிகவும் மகிழ்ச்சிகரமான ஒன்றாக விளங்கும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். கோவிட்-19 பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காரணத்தால் கடந்தாண்டு சீனப்புத்தாண்டை முழு பாரம்பரியத்துடன் கொண்டாட முடியாமல் போனது. இவ்வாண்டு இப்பெருநாள் மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியதாக விளங்கும் என்பது திண்ணம் என்று அவர் சொன்னார். இன்னும் சில எஸ்.ஓ.பி. நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டிய அவசியம் நமக்கு இருந்தாலும் சீனப்புத்தாண்டின் போது பெற்றோர்களின் வீடுகளுக்குச் செல்ல வழங்கப்பட்ட அனுமதி சீன சமூகத்திற்கு நிச்சயம் மகிழ்ச்சியைத் தரும் என்று அவர் தெரிவித்தார்.

இன்று கொண்டாடப்படும் சீனப்புத்தாண்டை முன்னிட்டு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு கூறினார். நாட்டிலுள்ள குறிப்பாக சிலாங்கூரில் இருக்கும் சீன சமூகத்தினருக்கு 2022 ஆம் ஆண்டு சீனப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டு புத்தாண்டு கொண்டாட்டம் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக விளங்குவது திண்ணம். கடந்தாண்டு காணப்பட்ட கோவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக இந்த விழாவைக் சிறப்பாக கொண்டாடுவதற்குரிய வாய்ப்பு கிட்டவில்லை என்றார் அவர். சீனப்புத்தாண்டின் போது குடும்பத்தினரையும் பெற்றோரையும் சந்திப்பது கன்பூஷியஸ் போதனையில் முக்கியமான அங்கமாக விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

# சீனப்புத்தாண்டு உதவித் திட்டங்களுக்கு பெக்காவானிஸ் வெ. 200,000 ஒதுக்கீடு




ஷா ஆலம் – சீனப்புத்தாண்டை முன்னிட்டு 49 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வழங்குவதற்காக பெக்காவானிஸ் எனப்படும் சிலாங்கூர் மாநில மகளிர் சமூக நல மன்றம் 196,000 வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியைக் கொண்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 30 பேருக்கு தலா 100 வெள்ளி வழங்கப்படும் என்று மன்றத்தின் தலைவர் டத்தின் ஸ்ரீ மஸ்டியானா முகமது கூறினார். எஞ்சியத் தொகை இதர திட்டங்களுக்கு அல்லது உதவி பெறுவோருக்கு வேறு பொருள்கள் வழங்கப் பயன்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். தனித்து வாழும் தாய்மார்கள், மூத்த குடிமக்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவினரை இலக்காக கொண்டு இந்த உதவித் திட்டம் அமல்படுத்தப்படுவதாக அவர் சொன்னார். கடந்த மாதம் தொடங்கிய இந்த நிதியுதவி வழங்கும் திட்டம் இம்மாத இறுதியில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுங்கை துவா, லெம்பா ஜெயா, கோம்பாக் செத்தியா உள்ளிட்ட தொகுதிகளுக்கு இதுவரை நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர். சீனப்புத்தாண்டைக் கொண்டாடும் ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் நிதிச்சுமையை ஓரளவு குறைக்க இந்த நிதியுதவித் திட்டம் துணை புரியும் எனத் தாங்கள் நம்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இயங்கலை வாயிலாக சீனப்புத்தாண்டு கொண்டாட்டம்

## 65,000 பேர் கண்டு களித்தனர்




ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசின் ஏற்பாட்டில் நேற்று இயங்கலை வாயிலாக நடத்தப்பட்ட 2022 சீனப் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வை 65,000 பேர் கண்டு களித்தனர். பல்லின மக்களின் கலாசார படைப்புகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வு மாநிலத் தலைவர்களின் முகநூல் மற்றும் மீடியா சிலாங்கூர் வாயிலாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டதாக பௌத்த மற்றும் தோ சமயங்களுக்கான செயல்குழுவின் தலைவர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார். இம்முறை நடைபெற்ற நிகழ்ச்சி மிகவும் வண்ணமயமாக இருந்தது. பல்லின மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளின் படைப்பு மகிழ்ச்சியளிக்கும் வகையில் இருந்தன. இந்நிகழ்ச்சியைக் காண்போரின் எண்ணிக்கையும் இம்முறை அதிகரித்துள்ளது என்றார் அவர். எல்லை கடப்பதற்கும் உற்றார் உறவினர்களைச் சந்திப்பதற்கும் இம்முறை வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும் அதிக எண்ணிக்கையிலானோர் இந்நிகழ்ச்சியை இயங்கலை வாயிலாக கண்டு களித்ததோடு அங்பாவ் வெல்லும் போட்டியிலும் பங்கு கொண்டர் என்று அவர் குறிப்பிட்டார். இந்த 90 நிமிட நிகழ்ச்சியில் 55 கலைஞர்கள் பங்கு கொண்டு 10 விதமான படைப்புகளை வழங்கினர். கோவிட்,19 நோய்த் தொற்று பரவல் காரணமாக கடந்த ஈராண்டுகளாக இந்த நிகழ்வு இயங்கலை வாயிலாக நடத்தப்படுகிறது.

# வெள்ள அகதிகளுக்கு உதவும் சட்டமன்ற உறுப்பினர்கள்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தனது தொகுதி மக்களுக்கு மானியம் வழங்கும் இஸ்லாமியச் சமய விவகாரங்கள், பயனீட்டாளர் மற்றும் ஹலால் தொழில்துறைக்கான பொறுப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது ஜாவாவி அகமது முக்னி



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பந்திங் தொகுதி மக்களுக்கு மானியம் வழங்கும் புற நகர் & பாரம்பரியக் கிராம மேம்பாடு, மலாய் மரபு, கலாசாரம் & பாரம்பரியத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் பர்ஹான் அமான் ஷா. அருகில் பந்திங் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் லாவ் வேங் சான்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மேரு தொகுதி மக்களுக்கு மானியம் வழங்கும் முன் விவரங்களை கேட்டு அறியும் மேரு சட்ட மன்ற உறுப்பினர் முகமது பக்ருள்ராஸி முகமது மொக்தார்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கோலக்கிள்ளான் தொகுதி மக்களுக்கு மானியம் வழங்கும் அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஸாம் ஜமான் ஹூரி .



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தனது புக்கிட் மலாவாத்தி தொகுதி மக்களுக்கு மானியம் வழங்கும் அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மந்திரி புசாரின் அரசியல் செயலாளருமான ஜூவாரியா சூல்கிப்லி.

## சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்பாட்டில் சீன சமூகத்திற்கு

# ஜோம் ஷேப்பிங் பற்றுச்சீட்டு, அங்பாவ் விநியோகம்

ஷா ஆலம் – சீனப்புத்தாண்டு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் வகையில் மாநிலத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலுள்ள சீன சமூகத்தினருக்கு பல்வேறு உதவிகளை நல்கினர். புக்கிட் மெலாவத்தி உறுப்பினர் ஜூவாய்ரியா ஜூல்கிப்ளி சுங்கை பூலோவிலுள்ள சீன சமூகத்தினருக்கு மாண்டரின் ஆரஞ்சுகளை விநியோகம் செய்தார். மேலும் இப்பெருநாளை முன்னிட்டு அவர் தஞ்சோங் கிராமாட் அருகிலுள்ள கம்போங் பாகான் குடியிருப்பாளர்களுக்கு உணவுக் கூடைகளையும் விநியோகித்தார். இதனிடையே, தாமான் டெம்ப்ளர் தொகுதி உறுப்பினரான முகமது சானி ஹம்சான் முப்பது பேருக்கு 100 வெள்ளி அங்காவ் மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார். வசதி குறைந்தவர்களும் பெருநாள் மகிழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் எனும் நோக்கிலான இந்த திட்டத்தை அவர் பெக்காவானிஸ் எனப்படும் சிலாங்கூர் மகளிர் சமூக நல மன்றத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டார். கோலக் கிள்ளான் உறுப்பினர் அஸ்மிஸான் ஜமான் ஹூரி தனது தொகுதியிலுள்ள 350 மூத்த குடிமக்கள், தனித்து வாழும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 100 வெள்ளிக்கான ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகளை விநியோகித்தார். பெர்மாத்தாங் தொகுதி உறுப்பினரான ரோசானா ஜைனால் அபிடின் பாசீர் பெனாம்பாங், கம்போங் பாகான் நிர்வாக மன்றத்துடன் இணைந்து மாண்டரின் பழங்களை வழங்கும் திட்டத்தை மேற்கொண்டார்.

# 10 லட்சம் வெள்ளி உதவி 10,000 பேருக்கு விநியோகம்

## நம்மால் முடியும்!

## ஸ்ரீ மூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தின் வெள்ள நிவாரணப் பணி









சிலாங்கூரில் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஷா ஆலம், தாமான் ஸ்ரீ மூடாவும் ஒன்று. அந்த அமைதியான குடியிருப்பு பகுதியை ஒரே நாளில் போர்க்கள பூமியாக மாற்றியது இந்த வெள்ளப் பேரிடர். இப்பகுதி மக்களின் வாழ்நாள் சேமிப்பை ஒரு கணத்தில் அழித்து அவர்களின் வாழ்வாதாரத்தை நிர்மூலமாக்கியது.

இந்த இயற்கை சீற்றத்திற்கு ஆலயமும் தப்பவில்லை. சுமார் ஏழு அடி நீரில் மூன்று நாட்களுக்கும் மேலாக மூழ்கிய ஆலயம், இடர்களிலிருந்து மூன்றே நாட்களில் மீண்டெழுந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு கவசமாகவும் இடர் நீக்கும் மையமாக எவ்வாறு மாறியது என்பதை விவரிக்கிறார் ஆலயத்தின் பொருளாளர் எம்.சுகுமாறன்.

எப்போதும் பளபளப்பாக காட்சியளிக்கும் இந்த ஆலயம் ஒரு அடி உயரத்திற்கு சேறும் சகதியும் நிறைந்த வயல்வெளி போல் காட்சியளித்தது. தளவாடங்கள், ஆவணங்கள், மின்சார சாதனங்கள், சமையல் பாத்திரங்கள், துணிகள், மின் இணைப்புகள், டியூஷன் வகுப்பு உபகரணங்கள் என அனைத்தும் சேதமுற்றன. ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதம் மட்டும் ஐந்து லட்சம் வெள்ளியை எட்டும்.

ஆலய நிர்வாகத்தினர் அனைவரும் வெள்ளத்தில் தங்கள் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்பையும் பொருட்படுத்தாது ஆலயத்தை சீர் படுத்துவதில் மும்முரம் காட்டினர். வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஸ்ரீ மூடா மக்களுக்கு உதவிகளை வழங்க கூடிய சமூக மையமாக இந்த ஆலயம் விளங்கியதால் அதனை விரைந்து சீர் படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினோம்.

ஐயப்ப பக்தர்கள், அனைத்து அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் என எண்ணிலடங்காதோர் ஆலய துப்புரவு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இது தவிர பினாங்கு அரசின் ஏற்பாட்டில் தன்னார்வலர் அமைப்பின் மூன்று தீயணைப்பு வண்டிகள், புத்ரா ஜெயாவில் இருந்து ஒரு தீயணைப்பு வண்டி இண்டா வாட்டர் கொள்கலன் லோரி ஆகியவற்றோடு இராணுவ வீரர்களும் இந்த துப்புரவு பணிகளில் பங்கெடுத்தனர்.

மூன்றே நாட்களில் துப்புரவுப் பணிகள் முழுமையடைந்த விட்ட நிலையில் மின்சாரம் இல்லாத குறையைப் போக்க ஜெனரேட்டர் இயந்திரம் வரவழைக்கப்பட்டு மின் விநியோகம் ஏற்படுத்தப்பட்டது என்று சுகுமாறன் குறிப்பிட்டார்.

அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளில் தாங்கள் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியதாக கூறிய அவர், மாநில அரசு, அரசு சாரா அமைப்புகள், அரசியல் கட்சிகள், சமய அமைப்புகள், தனி நபர்கள் என பெரும் எண்ணிக்கையிலானோரிடமிருந்து உதவிப் பொருட்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டதாகச் சொன்னார்.

வீட்டுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள், மின்சார சாதனங்கள், மெத்தை, தலையணைகள், சமையல் பொருட்கள், வீட்டை சுத்தம் செய்யும் உபகரணங்கள் என சுமார் பத்து லட்சம் வெள்ளி மதிப்பிலான பொருட்கள் வந்து குவிந்தன. பினாங்கு மாநில அரசு மூன்று கொள்கலன்கள் நிறைய பொருட்களை ஆலயத்திற்கு அனுப்பியது.

இந்த உதவிப் பொருட்களை இந்தியர்கள் மட்டுமின்றி சீன, மலாய் அன்பர்களும் வழங்கினர். அவற்றை ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான பொருட்களாக தரம் பிரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினோம். ஆலயத்திற்கு வரும் பொதுமக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கியது போக ஆறு வாகனங்களைப் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்று பொருட்களை விநியோகிக்கும் பணியிலும் ஈடுபட்டோம்.

சுமார் ஒரு மாதத்திற்கு நீடித்த இந்த உதவித் பொருள் விநியோகப் பணியில் ஆலய நிர்வாகத்தினர், தன்னார்வலர்கள் உள்பட சுமார் 100 பேர் பங்கேற்றனர்.

அரசியல் கட்சிகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் வழங்கும் உதவிகள் சரியான தரப்பினரை சென்று சேர்வதை உறுதி செய்வதில் ஆலய வசம் இருந்த தரவுகளும், மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும் கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினருமான வீ.கணபதிராவ் சேவையும் பெரிதும் துணை புரிந்தன.

.சமூகப் பணிகளை மேற்கொள்ளும் மும்முரத்தில் சமயப் பணிகளை நிறுத்தி விடக்கூடாது என்பதற்காக கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு 29 ஆம் தேதி ஆலயம் மீண்டும் வழிபாட்டிற்கு திறக்கப்பட்டது என அவர் கூறினார்.

இதற்கிடையே, அரசு சாரா அமைப்புகளின் ஏற்பாட்டில் ஆலய வளாகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டது, சங்கீதா ஜெயக்குமார் என்பர் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆடைகள் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது. இந்த ஆடை விநியோக நிகழ்வில் அனைத்து இனங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பள்ளி சீருடைகள் உள்ளிட்ட உடைகளைப் பெற்றுச் சென்றனர்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசின் உதவி நிதிக்கான மனு பாரங்களை பூர்த்தி செய்து அவற்றை மாவட்ட நில அலுவலகத்தில் ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆலயத்தின் சார்பாக வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பெரிதும் துணை புரிந்த மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சுற்றுவட்டார ஆலயங்கள், அரசு சாரா அமைப்புகள், தனி நபர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் தாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் சுகுமாறன் சொன்னார்.

# ஸ்ரீ மூடாவில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 3,000 பேருக்கு நிதியுதவி



ஷா ஆலம் – வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஸ்ரீ மூடா வட்டாரத்தைச் சேர்ந்த 3,000 பேருக்கு மலேசியா ட்ஸூ ஸீ சங்க அறவாரியம் தலா 1,000 ஆயிரம் வெள்ளியை வழங்கியது. கடந்த மாதம் 24 முதல் 26 ஆம் தேதி வரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாங்கள் மேற்கொண்டு துப்பரவுப் பணியின் போது கண்டறியப்பட்ட பாதிப்புகளின் அடிப்படையில் இந்த நிதியுதவித் திட்டம் அமல்படுத்தப்பட்டதாக அந்த அறவாரியத்தின் துணை தலைமை செயல்முறை அதிகாரி சியோ கீ ஹோங் கூறினார்.

அந்த துப்புரவுப் பணியின் போது கார், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்கள் உள்பட வீட்டிலுள்ள அனைத்து பொருள்களும் முற்றாகச் சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்கள் பெரும் துயரில் இருந்ததைக் கண்டோம். ஆகவே, அவர்கள் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு ஏதுவாக இந்த ரொக்கத் தொகையை வழங்க முடிவு செய்தோம். மக்களின் சுமையைக் குறைக்கும் அதேவேளையில் நாட்டு மக்கள் நலன் மீது எங்களின் பரிவைக் காட்டும் விதமாகவும் இந்த உதவியை வழங்குகிறோம்.

தொடக்கக் கட்டமாக ஸ்ரீ மூடாவில் இந்த நிதியுதவித் திட்டத்தை ஆரம்பிக்கிறோம். பின்னர் உலு லங்காட் மற்றும் பகாங்கில் இத்திட்டம் தொடரப்படும் என்றார் அவர் இந்த உதவியைப் பெற்ற அனைவரும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது அடையாளம் காணப்பட்டவர்களாவர். இன, மத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் இந்த உதவியை வழங்குகிறோம் என்று அவர் சொன்னார்.

# வெள்ள பாதிப்பிலிருந்து மீண்டு வர பக்தர்கள் தைப்பூசத்தில் உறுதி

ஷா ஆலம் – வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டு வருவதற்குரிய மனவலிமையை பெறுவதற்கு இந்துக்கள் இந்த தைப்பூச விழாவில் உறுதி பூண்டுள்ளனர். கடந்த மாத மத்தியில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் உண்டான இழப்பு தமக்கு பெரும் சவாலாக உள்ளதாக தாமான் ஸ்ரீமூடாவைச் சேர்ந்த தனித்து வாழும் தாயான கே. முருகேஸ்வரி (வயது 58) கூறினார். அந்த வெள்ளப் பேரிடரில் வீட்டின் கீழ்த்தளத்தில் இருந்த அனைத்து பொருள்களும் சேதமடைந்து விட்டதாக அவர் சொன்னார். சவால்கள் வரும் போது அதனை எதிர்கொள்ளும் பக்குவத்தையும் அதிலிருந்து மீள்வதற்குரிய மனவுறுதியையும் இந்த தைப்பூச விழா எங்களுக்கு வழங்கியுள்ளது அவர் குறிப்பிட்டார். இந்த மனவுறுதியே இழப்பிலிருந்து வாழ்க்கையை மீட்டெடுப்பதற்குரிய பக்குவத்தை எங்களுக்கு வழங்குகிறது என்று இங்குள்ள செக்சன் 23, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் சந்தித்த போது திருமதி முருகேஸ்வரி கூறினார். இந்த வெள்ளப் பேரிடர் சம்பவத்தை சமயத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போல் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ள தாங்கள் தயாராகி விட்டதாக வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மற்றொரு நபரான ஏ.குமரன் (வயது 37) தெரிவித்தார்.



வெள்ளத்தில் அனைத்து பொருள்களையும் இழந்தாலும் அதனை பொறுமையுடன் எதிர்கொள்ள வேண்டிய தருணம் இது என்று புக்கிட் கெமுனிங் பகுதியைச் சேர்ந்த அவர் குறிப்பிட்டார். கடந்த மாதம் 17 முதல் 19 ஆம் தேதி வரை பெய்த அடை மழை காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது.

# தைப்பூசத்தைக் கொண்டாட பார்வதிக்கு

## வெள்ள பாதிப்பு ஒரு தடையல்ல!



ஷா ஆலம் – அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் கடும் பாதிப்புகளை எதிர்நோக்கிய போதிலும் தைப்பூச விழாவைக் கொண்டாடுவதற்கு அந்த பேரிடர் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. பேரிடர் பாதிப்புகளுக்கு மத்தியில் மிதமான அளவிலாவது அந்த விழாவைக் கொண்டாடுவதில் பக்தர்கள் உறுதியாக உள்ளனர். சிலாங்கூரில், குறிப்பாக தாமான் ஸ்ரீ மூடா பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் மனவேதனையை அளிக்கும் ஒரு சம்பவமாகும் என்று இல்லத்தரசியான திருமதி பி.பார்வதி (வயது 60) கூறினார்.

தைப்பூசத்தை கொண்டாடும் நேரத்தில் ஏற்பட்ட அந்த வெள்ளச் சம்பவம் எங்கள் குடும்பத்திற்கு மிகுந்த வேதனையை அளித்துள்ளது. சேதத்திற்குள்ளான வீட்டை இன்னும் முழுமையாகச் சுத்தம் செய்து முடிக்கவில்லை. இருந்த போதிலும், கடுமையான எஸ்.ஓ.பி. விதிகளுக்கு மத்தியிலும் தைப்பூச விழாவை கொண்டாடுவதற்குரிய வாய்ப்பு கிடைத்தமைக்காக இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார் அவர். மிதமான அளவிலும், ஒன்றுபட்டும், பிறருக்கு தீங்கிழைக்காமலும் வாழ வேண்டும் என்ற படிப்பினையை இந்த வெள்ளப் பேரிடர் எங்களுக்கு கற்றுத் தந்துள்ளது என்று ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாரான பார்வதி சொன்னார். பிறந்துள்ள இந்த புத்தாண்டு அனைவருக்கும் நல்ல ஆரோக்கியத்தையும் எதிர்கால வாழ்வு சுபிட்சமாக அமைய பிள்ளைகளுக்கு நல்ல படிப்பையும் கொடுக்க இறைவனை தாம் வேண்டிக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ள நிவாரண நிதி விரைவாக விநியோகம்




கிள்ளான் – கடந்தாண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பந்துவான் சிலாங்கூர் பங்கிட் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பரிசீலிப்பது மற்றும் நிதி வழங்குவது எளிதான முறையில் மேற்கொள்ளப்பட்டதாக பாடாங் ஜாவா வட்டார குடியிருப்பாளர்கள் கூறினர். வெள்ளத்தில் சேதமடைந்த பொருள்களுக்கு பதிலாக புதிய பொருள்களை வாங்குவதற்கு இந்த உதவித் தொகை பெரிதும் துணை புரிந்ததாக பாதுகாலரான அஸ்மான் அப்துல் சமாட் கூறினார். வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும் உதவி நிதி விரைவாக கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார். இதனிடையே, நேற்று முன்தினம் வரை 1,500 வெள்ள உதவி நிதி விண்ணப்பங்கள் கிள்ளான் மாவட்ட நில அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கிராம சமூக நிர்வாகத் தலைவர் பட்ஸில்லா ஹஷிம் கூறினார். முதல் கட்டமாக இப்பகுதியைச் சேர்ந்த 300 பேர் மாநில அரசின் உதவித் தொகையைப் பெற்றுள்ளனர் என்றார் அவர். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 10 கோடி வெள்ளி நிதியில் பந்துவான் சிலாங்கூர் திட்டத்தை மாநில அரசு தொடக்கியது.

# மோசமான வானிலை உள்ளிட்ட காரணங்களால் துப்புரவுப் பணியில் தாமதம்




ஷா ஆலம் – வெள்ளம் பாதித்த பகுதிகளில் கடந்த டிசம்பர் மாதம் தொடங்கிய இரண்டாம் கட்ட துப்புரவுப் பணிகள் மே மாதம் நிறைவடையும் என கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனம் எதிர்பார்க்கிறது. மிகவும் குறுகலான மற்றும் ஆழமான வடிகால்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வது தமது ஊழியர்களுக்கு பெரும் சவாலாக உள்ளதாக அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரம்லி முகமது தாஹிர் கூறினார். சில இடங்களில் வடிகால்கள் முழுமையாக மூடப்பட்டு உள்ளன. அவற்றை உடைத்தப் பின்னரே குப்பைகளை அகற்றுதல் மற்றும் கிருமி நாசினி தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடிகிறது என அவர் சொன்னார். சிலாங்கூரில் குப்பைகளை அகற்றுவதற்கு பொறுப்பேற்றுள்ள மாநில அரசின் துணை நிறுவனமான கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கடந்த ஆண்டு டிசம்பர் 20 முதல் கட்டங்களாக சுத்தப்படுத்தி வருகிறது. இம்மாதம் 7 ஆம் தேதி வரை ஊராட்சி மன்றங்கள் உள்பட பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மொத்தம் 78,000 மெட்ரிக் டன் குப்பைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டன. ஜனவரி 8 ஆம் தேதி முதல் இந்நிறுவனம் இரண்டாம் கட்டத் துப்புரவுப் பணியில் அடைபட்ட வடிகால்களை சுத்தம் செய்வது மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி தெளிப்பது ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மோசமான வானிலை உள்ளிட்ட காரணங்களால் இந்த துப்பரவுப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ரம்லி தெரிவித்தார்.

# சுற்றுச்சூழலை பாதுகாக்க
## பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யை சேகரிக்கும் பணியில் டீம் சிலாங்கூர்




ஷா ஆலம் – சுற்றுச்சூழலை பாதுகாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்யை சேகரிக்கும் நடவடிக்கையில் டீம் சிலாங்கூர் தன்னார்வலர் அமைப்பு ஈடுபட்டு வருகிறது. எண்ணெய்க் கழிவுகளை கால்வாய்கள், நீரோட்டக் குழாய்கள் மற்றும் வடிகால்களில் வெளியேற்றுவதற்கு எதிரான விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சிலாங்கூர் செயலகத்தின் தலைவர் ஷியாஹைசெல் கெமான் கூறினார். தேந்தெடுக்கப்படும் இடங்களில் வசிக்கும் மக்கள் பயன்படுத்தப்பட்ட எண்ணெய்யை சேமித்து வைப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு போத்தல்கள் வழங்கப்படும். குறிப்பிட்ட சில வாரங்களுக்குப் பிறகு அவற்றை நாங்கள் சேகரிப்போம் என்று அவர் தெரிவித்தார். சமுதாயத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் மிகபெரிய பயனைத் தரக்கூடிய இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார். கடந்தாண்டில் இதேபோன்ற இயக்கம் மேற்கொள்ளப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், குவாங், காஜாங், உலு பெர்ணம், தாமான் மேடான் ஆகிய பகுதிகளிலிருந்து 520 லிட்டர் சமையல் எண்ணெய்யை 92 டீம் சிலாங்கூர் தன்னார்வலர்கள் சேகரித்த தாக குறிப்பிட்டார்.

# தாமான் ஸ்ரீ மூடா வெள்ளம்

## 1,500 பேருக்கு அடைக்கலம் தந்த எமரால்டு தமிழ்ப்பள்ளி

சிலாங்கூர் வாழ் மக்களுக்கு குறிப்பாக ஷா ஆலம், தாமான் ஸ்ரீ மூடா வட்டார குடியிருப்பாளர்களுக்கு 2021 டிசம்பர் 18 ஆம் ஒரு கருப்பு தினமாகும். அடிப்படை வசதிகளோடு கௌரவமாக வாழ்ந்தவர்களை கணநேரத்தில் அகதிகளாக்கியது எட்டுத் திக்கிலுமிருந்து சூழ்ந்த வெள்ளம். உடைமைகளை மீட்பதா? உறவுகளைக் காப்பதா? என ஒரு கணம் செய்வதறியாது திகைத்து உயிரே முக்கியம் என உடுத்திய உடைகளோடு தடுமாறி தத்தளித்து கரையேறிய மக்களுக்கு கலங்கரை விளக்கமாக வழிகாட்டியது எமரால்டு தமிழ்ப்பள்ளி. பள்ளியில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் என சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதற்கு கடந்த மாதம் 18 ஆம் தேதி தொடங்கி எட்டு தினங்கள் இரவு பகல் பாராமல் தாங்கள் நடத்திய போராட்டங்களையும் சவால்களை விவரிக்கிறார் எமரால்டு பள்ளி துயர் துடைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளரும் அப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவருமான கி. தயாளன். டிசம்பர் 18 ஆம் தேதி இரவு 8.00 மணியளவில் ஏற்பட்ட வெள்ளத்தை தொடர்ந்து பள்ளித் தலைமையாசிரியரின் அனுமதியுடன் வெள்ள அகதிகளுக்கு பள்ளியில் அடைக்கலம் வழங்கப்பட்டதாக அவர் சொன்னார். மறுநாள் காலையில் 600 பேராக உயர்வு கண்டது. அருகிலுள்ள ஆலயத்தின் ஏற்பாட்டில் காலை சிற்றுண்டி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அடுத்த சில தினங்களில் இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து கடந்த 21 ஆம் தேதி இம்மையத்தில் தங்கியிருந்தவர்களின் எண்ணிக்கை 1,500 ஆக உயர்வு கண்டது. பள்ளியில் உள்ள மிகப்பெரிய திறந்த வெளி மண்டபம் அவர்களை மழை, வெயிலில் இருந்து காப்பாற்றியது. இது போக பள்ளியின் அனைத்து 20 வகுப்பறைகளையும் மக்கள் தங்குவதற்கு திறந்த விட்டோம். மேலும், ஸௌ ஸீ அறவாரியத்தின் ஏற்பாட்டில் நட்மா எனப்படும் பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் 60 தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் அங்கு தங்க வைக்கப்பட்டனர். இந்த துயர் துடைப்பு மையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு உதவி தேவை என்று நாங்கள் சமூக ஊடகங்கள் வழி வெளியிட்ட தகவல் தீயாய் பரவி நாடு முழுவதுமிருந்து இன பேதமின்றி எண்ணிலடங்காத மக்களிடமிருந்து உணவு, அத்தியாவசியப் பொருள்கள், உடைகள், உள்ளிட்ட பொருள்கள் வந்து குவியத் தொடங்கின. இந்த மையத்தில் 1,500 பேர் தங்கியிருந்த நிலையில் 3,000 பேருக்கு தேவையான உணவு உள்ளிட்ட பொருள்கள் வந்து குவிந்தன. தேவைக்கு அதிகமாக உள்ள உணவுகளை படகுகள் மற்றும் நான்கு சக்கர இயக்க வாகனங்கள் மூலம் சுற்றுவட்டாரங்களில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு விநியோகம் செய்தோம். இது தவிர அதிகமாக இருந்த அத்தியாவசியப் பொருள்கள், உடைகள், உலர்ந்த உணவுப் பொருள்கள் போன்றவற்றை காப்பார், பந்திங், டிங்கில், ஜெராம், கோல சிலாங்கூர், காராக் போன்ற பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பினோம். இந்த மையத்தில் 45 விழுக்காட்டு இந்தியர்களும் 30 விழுக்காட்டு மலாய்க்கார்களும் 10 விழுக்காட்டு சீனர்களும் 15 விழுக்காட்டு அந்நிய நாட்டினரும் தங்கியிருந்தனர். இங்கு தங்கியிருந்த மலாய்க்காரர்களின் சமய உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில் அவர்களுக்கு ஹலால் உணவும் ஏற்பாடு செய்து தந்தோம். மூத்த குடிமக்கள் மற்றும் வெள்ளம் மற்றும் மழையில் நனைந்து நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இம்மையத்தில் தற்காலிக கிளினிக் உடனடியாக நிறுவப்பட்டது. தன்னார்வலர் அடிப்படையில் நான்கு மருத்துவர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் பணியில் ஈடுபட்டு நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தனர். சிகிச்சைக்கு தேவையான மருந்துகளை சுற்று வட்டாரத்திலுள்ள கிளினிக்குகள் இலவசமாக வழங்கி உதவின. முன்பின் அறியாதவர்களும் துரித பட்டுவாடா சேவையின் மூலம் மருந்துகளை எங்களுக்கு அனுப்பினர். இது மட்டுமின்றி ஆபத்து அவசர வேளையில் நோயாளிகளை மருத்துவமனைக்கு கொண்டுச் செல்வதற்கு ஏதுவாக செம்பிறைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரு ஆம்புலன்ஸ் வாகனங்கள். கோவிட்.19 சோதனை மேற்கொள்ளப்பட்டு நோய் கண்டவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதோடு அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு பிரத்தியேக அறை ஏற்பாடு செய்யப்பட்ட தனிமைப் படுத்தப்பட்டனர். எட்டு நாட்கள் செயல்பட்ட இந்த மையம் இங்கு தங்கியிருந்த அனைவரும் வீடு திரும்பியப் பின்னர் மூடப்பட்டது. சுமார் 10 லட்சம் வெள்ளி மதிப்பிலான உணவு உள்ளிட்ட பல்வேறு பொருள்களை அரசு சாரா அமைப்புகள், தனி நபர்களிடமிருந்து பெற்றோம். இப்பொருள்கள் யாவும் முறையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்வதில் உறுதியாக இருந்தோம். சக மனிதர்களின் துயர் கண்டு மனமுருகி உதவ முன்வந்த முகவரி தெரியாத முகங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். மனித நேயம் மரிக்கவில்லை.அது உயிர்ப்போடு இன்னும் இருக்கிறது என்பதை இந்த வெள்ளப் பேரிடர் இந்த உலகிற்கு மீண்டும் நிரூபித்திருக்கிறது என்று தயாளன் குறிப்பிட்டார்.








# ஹாங்காங்கில் மலேசியாவுக்கு மீண்டும் 250 கோடிக்கு பட்டை நாமமா?

## விளக்குமாறு அமைச்சரிடம் அன்வார் வலியுறுத்தினார்



ஷா ஆலம் : திவாலான கெந்திங் ஹாங்காங் பயணக் கப்பல் நிறுவனத்திற்கு 600 மில்லியன் அமெரிக்க டாலர் (RM2.51 பில்லியன்) பாதுகாப்பற்ற கடனளித்தது குறித்து பதிலளிக்க டத்தோ ஸ்ரீ அன்வார் நிதியமைச்சரை வலியுறுத்தினார். இந்த வங்கிகள் ஏன் "கெந்திங் ஹாங்காங்கிற்கு" பாதுகாப்பற்ற கடன்களை வழங்க அனுமதிக்கப் படுகின்றன என்ற கேள்விக்கு நிதியமைச்சரை உடனடியாக பதிலளிக்க வலியுறுத்துகிறேன்," என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். முக்கிய அரசாங்க முதலீட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமான மலேசியாவில் உள்ள மூன்று பெரிய வங்கிகள் எப்படி "இவ்வளவு எளிதாக" கடன் கொடுக்க முடியும் என்று டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கேள்வி எழுப்பினார். கப்பல் நிறுவனம் கடனை எவ்வாறு செலுத்தும் என்பதனை துங்கு டத்தோஸ்ரீ உத்தாமா ஜஃப்ருல் துங்கு அப்துல் அஜீஸ் விளக்க வேண்டும் என்று அவர் கோரினார். "என்னைப் பொறுத்தவரை, பூமிபுத்ரா மலேசியா ஃபைனான்ஸ் (பிஎம்எஃப்) ஹாங்காங் ஊழல் மீண்டும் நிகழாமல் தடுக்க இந்த விளக்கம் விரைவுபடுத்த வேண்டும்" என்று அவர் இன்று பேஸ்புக் அறிக்கை வழி தெரிவித்துள்ளார். கடந்த 1982ம் ஆண்டில் ஹாங்காங்கில் மலேசியாவிற்கு சொந்தமான 2.5 பில்லியன் ரிங்கிட் பண மோசடி நடந்ததை அன்வார் குறிப்பிட்டார். அதில் பேங் பூமிபுத்ரா வங்கியின் ஆடிட்டர் ஜலீல் இப்ராஹிம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த செய்தி நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மே பேங் பெர்ஹாட் கெந்திங் ஹாங்காங் நிறுவனத்தின் திவாலால் தனது நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளதை மறுத்துள்ளது. அதே நேரத்தில் ஆர்.எச்.பி (RHB) வங்கியும் போதுமான பணப்புழக்கம் மற்றும் மூலதனம் இருப்பதாக வலியுறுத்தியுள்ளது.*

# நிச்சயமற்ற வானிலை காரணமாக கோழி முட்டை உற்பத்தி பாதிப்பு



ஷா ஆலம் – நாட்டில் கோழி முட்டை உற்பத்தி குறைந்ததற்கு நிச்சயமற்ற வானிலையும் ஒரு காரணமாகும் என்று விவசாயம் மற்றும் உணவுத் தொழில்துறை துணையமைச்சர் டத்தோ ஸ்ரீ அகமது ஹம்சா கூறினார்.
விவசாயத் துறையின் உற்பத்திக்கு மட்டுமின்றி கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழிலின் பாதிப்புக்கும் நாட்டின் சீதோஷண நிலை காரணமாக உள்ளது என்று அவர் சொன்னார். அண்மையில் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளம் மற்றும் கால்நடைத் தீவனங்களின் விலையேற்றம் ஆகியவையும் முட்டை உற்பத்தி பாதிப்புக்கு வழிகோலியது என்றார் அவர். இதற்கு முந்தைய ஆண்டுகளில் கோழி முட்டையின் உற்பத்தி பாணியைப் பார்த்தால் ஜனவரி மாதம் உற்பத்தி குறைந்து பிப்ரவரி மாதம் அதிகரிக்கும். காரணம் இது பருவகால நடைமுறையாகும் என்று அவர் தெரிவித்தார். சில்லரை விற்பனை நிலையில் கோழி முட்டையின் விலையை கட்டுப்படுத்தும் போக்கு காணப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டை அமைச்சு நிராகரிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.



# ஜோகூர் தேர்தல் – பிரசார காலத்தை நீட்டித்து வாக்காளர்களைச் சந்திக்க அனுமதிப்பீர்

ஷா ஆலம் – ஜோகூர் மாநிலத் தேர்தலின் போது பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கும் வாக்காளர்களைச் சந்திப்பதற்கும் அனுமதிக்கும்படி தேர்தல் ஆணையத்தை பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

நாடு எண்டமிக் கட்டத்தை நோக்கி நகர்வது, கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது மற்றும் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 80 விழுக்காட்டிற்கும் மேல் அதிகரித்துள்ளது ஆகிய அடிப்படையில் இந்த கோரிக்கையை தாங்கள் முன்வைப்பதாக ஹராப்பான் தலைவர் மன்றம் கூறியது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் வாக்காளர்களை நேரில் சந்திக்கும் நிகழ்வுகளும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு ஏதுவாக தேர்தல் ஆணையம் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (எஸ்.ஓ.பி.) சரி செய்ய வேண்டும் என்று அந்த மன்றம் அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியது.

பக்கத்தான் ஹராப்பான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு–

1.கடுமையான எஸ்.ஓ.பி. விதிமுறைகளுடன் வீடு வீடாகச் சென்று பிரசுரங்களை விநியோகிக்க அனுமதிக்க வேண்டும்

2.அச்சு மற்றும் ஒளி, ஒலிபரப்பு ஊடகங்களில் அனைத்து கட்சிகளுக்கு சமமான அளவில் பிரசார வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்

3.தபால் வாக்களிப்பை அமல் செய்வதற்கு ஏதுவாக வெளிநாடுகளில் உள்ள மலேசிய தூதரகங்களுடன் தேர்தல் ஆணையம் இணைந்து செயல்பட வேண்டும்.

4.தேர்தல் பிரசாரத்திற்கு குறைந்தது 21 நாட்கள் வழங்கப்பட வேண்டும்.

# பேரிடர் மேலாண்மை கொள்கையை மறுஆய்வு செய்ய ஆணையம் அமைப்பீர்




கிள்ளான் – சிலாங்கூர் கால்பந்து சங்கத்தின் (எஃப்.ஏ.எஸ்.) தலைவர் பதவியை துங்கு அமிர் ஷா சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா தக்க வைத்துக் கொண்டார். சிலாங்கூர் கால்பந்து சங்கத்தின் 69 மற்றும் 70 ஆம் ஆண்டு கூட்டத்தின் போது நடைபெற்ற 2022-2026 தவணைக்கான நிர்வாகக் குழு தேர்வில் இந்த நியமனம் அறிவிக்கப்பட்டது. இந்த நியமனத்தின் வழி துங்கு அமீர் ஷா அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எஃப்.ஏ.எஸ். தலைவர் பதவியை வகிப்பார். சங்கத்தின் துணைத் தலைவராக டத்தோஸ்ரீ ஷாரில் மொக்தாரும் உதவித் தலைவர்களாக டத்தோ அப்துல் ராவுஃப் அகமது, டத்தோ பி. சுகுமாறன், முகமது யூனுஸ் @ இஸ்கந்தார் முகமது நோர், ஆர்.சந்திர சேகரன் ஆகியோர் நியமனம் பெற்றனர். இத்தேர்தலுக்கு 47 வேட்புமனுக்கள் பெறப்பட்டதாகவும் அதில் ஒரு மனு தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதால் நிராகரிக்கப்பட்டதாகவும் எஃப்.ஏ.எஸ். சுயேச்சை தேர்வு மன்றத்தின் பிரதிநிதி அனாஸ் ஷாபி கூறினார். வேட்பு மனுவைத் தாக்கல் செய்த அனைவரும் போட்டியின்றி தேர்வு பெற்றுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

# எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அம்பாங்கில் பொங்கல் விழா




அம்பாங் – இந்தியர்களின் பாரம்பரிய விழாவான பொங்கல் விழா அம்பாங்கில் உள்ள டத்தோ அமாட் ரசாலி மண்டபத்தில் இந்திய சமூகத் தலைவர், மலேசிய தமிழர் சங்கம் (அம்பாங் கிளை), அறம் இயக்கம், லெம்பா ஜெயா, புக்கிட் அந்தாராபங்சா சட்ட மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் இணை ஏற்பாட்டில் நடைப்பெற உள்ளது. இந்நிகழ்ச்சிக்கு புக்கிட் அந்தாராபங்சா மற்றும் லெம்பா ஜெயா சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர்கள் சுசானா, டாய்ங் மற்றும் தமிழர் சங்கத்தின் தேசியத் தலைவர் எம்.ஜெ.கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவிருக்கின்றனர். நமது பாரம்பரிய நடனமான பரதம், மயிலாட்டம், கோலாட்டம், கரகாட்டம் போன்றவைகளுடன், நமது தற்காப்பு கலையான சிலம்ப விளையாட்டுடன் இந்நிகழ்ச்சி தொடங்கும் என இந்திய சமூகத் தலைவரும் அறம் இயக்கத்தின் தலைவருமான நடேசன் வரதன் கூறினார். இந்த விழாவில் பூத்தொடுத்தல், தோரணம் பின்னுதல், மட்டை பின்னுதல், கோலம் போடுதல், இசை நாற்காலி, உறி அடித்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகள் தமிழ் பாரம்பரிய உடை அணிந்து வரும் போட்டியும் நடைபெற இருக்கின்றன. இவ்விழாவின் சிறப்பு அம்சமாக சிலாங்கூர் மாநில அரசு உதவி திட்டங்களுக்கான பாரங்கள், டிப்ளோமா, டிகிரி கல்வி நிதி உதவிக்கான பாரங்கள் உட்பட இதர விளக்க உறைகளும் வழங்கப்பட உள்ளதாக இந்திய சமூகத் தலைவர் நடேசன் வரதன் கூறினார். ஆகவே, வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும் இவ்விழாவில் சுற்றுவட்டார மக்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டனர்.

# 8 நாடுகள் கலந்துக்கொள்ளும் ஆசிய பூப்பந்து போட்டியை சிலாங்கூர் நடத்துகிறது



சுபாங் ஜெயா : முதல் முறையாக, சிலாங்கூர் ஆசிய அணி பூப்பந்து சாம்பியன்ஷிப் (BATC) 2022 ஐ நடத்துகிறது, இது பிப்ரவரி 15 முதல் 20 வரை ஷா ஆலமில் உள்ள சித்தியா சிட்டி கொன்வென்சென் மையத்தில் நடைபெறுகிறது. சிலாங்கூர் மாநில விளையாட்டு கவுன்சில், பூப்பந்து ஆசியா மற்றும் மலேசியாவின் பூப்பந்து அசோசியேஷன் (பிஏஎம்) ஆகியவற்றுடன் இணைந்து இந்த மதிப்புமிக்க போட்டியை ஏற்பாடு செய்துள்ளதாக ஸ்போர்ட்ஸ் எக்ஸ்கோ முகமட் கைருடின் ஓத்மான் கூறினார். டத்தோ 'மந்திரி புசார் டத்தோ' ஸ்ரீ அமிருதின் ஷாரி அறிமுகப்படுத்தியுள்ள சிலாங்கூர் பாங்கிட்டின் (சிலாங்கூர் எழுச்சி) கருப்பொருளுக்கு ஏற்ப "சிலாங்கூர் உபசரணையாளராக இருக்க தயாராக உள்ளது "மலேசிய விளையாட்டுகள் (சுக்மா) மற்றும் பல்வேறு விளையாட்டுகளின் நிச்சயமற்ற நிலைக்குப் பிறகு, விளையாட்டுத் துறை மீண்டு வருவதை உறுதிசெய்ய BAM மற்றும் பூப்பந்து ஆசியாவுடன் இணைந்து பணியாற்ற துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்," என்று அவர் இன்று செய்தியாளர் கூட்டத்தில் கூறினார். கொரியா, இந்தியா, தாய்லாந்து, ஹாங்காங், கஜகஸ்தான் மற்றும் மலேசியா உட்பட எட்டு நாடுகள் இதுவரை தங்கள் பங்கேற்பை உறுதி செய்துள்ளதாக முகமட் கைருடின் ஓத்மான் கூறினார்.

"அது தவிர, விமான நிலையத்தில் இருந்து ஹோட்டலுக்கும் பின்னர் போட்டி நடைபெறும் இடத்திற்கும் வீரர்களுக்கான நிலையான இயக்க நடைமுறை (SOP) தொடர்பாக மலேசிய சுகாதார அமைச்சகத்துடன் நாங்கள் விவாதித்தோம். "பூப்பந்து விளையாட்டு ரசிகர்கள் , வரவு குறித்து, நாங்கள் இன்னும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம், இந்த போட்டி ஒரு பெரிய இடத்தில் நடைபெறுவதால், MOH அதை பரிசீலிக்கும் என்று நம்புகிறோம்," என்று அவர் கூறினார்.

# ஜோகூர் மாநில தேர்தலில் 2.57 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

ஜோகூர் பாரு : விரைவில் நடைபெறவுள்ள ஜோகூர் மாநிலத் தேர்தலில் (பிஆர்என்) பதிவு செய்யப்பட்ட 2.599 மில்லியன் வாக்காளர்களில் மொத்தம் 2.576 மில்லியன் சாதாரண வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.




தேர்தல் ஆணையம் (எஸ்பிஆர்) வெளியிட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில், மொத்தத்தில், 22,536 பேர் முன்கூட்டியே வாக்களிப்பவர்கள், இதில் 10,958 ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள், 11,578 பேர் போலீஸ்காரர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள்.

ஜனவரி 17 அன்று எஸ்பிஆர் ரால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி, அனைத்து மாநில சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்களிக்க வர இயலாத வெளிநாட்டில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 376 ஆகும்.

வாக்காளர்கள் பதிவு மறுஆய்வு போர்டல் வழி https://pengundi.spr.gov.my., MySPR சோதனை விண்ணப்பம் மற்றும் 03-88927018 மூலம் எஸ்பிஆர் ஹாட்லைன் மூலம் ஆரம்பச் சரிபார்ப்பை மேற்கொள்ளலாம்.

18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 749,731 பேர், இயல்பான வாக்காளர்கள் ஆனதை தொடர்ந்து ஜோகூரில் வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 28 சதவீதம் அதிகரித்துள்ளது.

பிப்ரவரி 9 அன்று சிறப்புக் கூட்டத்தை நடத்திய பிறகு, ஜோகூர் பிஆர்என் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# பத்துமலையில் பக்தர்கள் உதவியுடன் பிரசவம் மனம் நெகிழ்ந்தார் மலாய் மாது



ஷா ஆலம் – பத்துமலை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் அருகே காரில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென பிரசவ வலி ஏற்பட்ட போது தமக்கு விரைந்து வந்த உதவி புரிந்த பக்தர்களுக்கு மலாய் மாது நன்றி தெரிவித்துக் கொண்டார்.

காரிலேயே குழந்தையை ஈன்றெடுத்த போது தமக்கு துணையாக இருந்த பக்தர்களின் பரிவைக் கண்டு நாம் நெகிழ்ந்து போனதாக லிடாவத்தி ஜக்காரியா (வயது 39) கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த இச்சம்பவத்தின் போது தாம் சுகப்பிரசவம் காண்பதற்கு பெரிதும் உதவிய மேரி புஷ்பம் மற்றும் அவரின் புதல்வி நோராஷினி அருணாசலம் ஆகியோரின் உதவியை ஒரு போதும் மறக்க மாட்டேன் என்று அவர் சொன்னார். நிறைய பேர் உதவிக்கு வந்ததைக் கண்டு நான் மனம் நெகிழ்ந்து போனேன். வழிபாட்டிற்கு கொண்டு வந்த உடைகளை எனக்கு கொடுத்து உதவினர். இரத்தம் படும் என்ற போதிலும் போதும் அது பற்றி கவலைப்படாமல் அவர்கள் அத்துணியைக் கொண்டு எனது உடலைப் போர்த்தினர்.

அந்த துணியை (வேஷ்டி) இன்னும் நான் அச்சம்பவத்தின் நினைவாக வைத்திருக்கிறேன் என்று கிள்ளான் மேருவைச் சேர்ந்த அந்த மாது உவகையுடன் கூறினார்.

அந்த பிரசவ சம்பவத்தை மீண்டும் நினைவுக்கூர்ந்த லிடாவத்தி, தமக்கு பிரசவ வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து கணவருடன் தாம் கோம்பாக் மருத்துவமனைக்கு பயணமானதாக தெரிவித்தார்.

ஆலயம் அருகே வந்த போது எங்கள் கார் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டது. காரிலியே குழந்தையை பிரசவிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட போது தைப்பூசத்திற்கு வந்த பக்தர்கள் உதவிக்கு விரைந்தோடி வந்தனர்.

மேரியும் நோரோஷினியும் காரி கதவைத் தட்டி எனது நிலை குறித்து விசாரித்தனர். குழந்தையை பிரசவிப்பதாக நான் கூறினேன். அவர்கள் காரின் கதவை திறக்கும்படி கேட்ட போது, விழாவில் பங்கேற்கும் அவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக பரவாயில்லை எனக் கூறி விட்டேன். எனினும், அவ்விருவரும் என்னை வற்புறுத்தி காரின் கதவைத் திறக்க வைத்து குழந்தையைப் பிரசவிக்க உதவினர். அவர்கள் தாங்கள் கட்டியிருந்த புடவையைக் களைந்து இரத்தம் தோய்ந்த எனது உடலைப் போர்த்தினர் என்று லிடாவத்தி சொன்னார்.

கடந்த வாரம் தைப்பூசத்தின் போது பத்து மலை அருகே காரில் பயணித்த போது பிரசவ வலி கண்ட மலாய் மாது ஒருவர் உதவியது தொடர்பில் தமிழ்ப்பத்திரிகை நிருபர் ஒருவர் வெளியிட்ட பதிவு சமூக ஊடகங்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (sebelumnya dikenali **Communication Corporation Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off Persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.